முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்
அசல் வழக்கு எண். 13/2021

இன்று 2025 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : கங்காதேவி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சேகர் | கிராமம் | : | |
| வயது | : | தாலூக்கா | : | |
| நாள் | : 14-02-2025 | மாவட்டம் | : | திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி 3 ,4 பிரதிவாதிகள் சார்பில் நீதிமன்ற காப்பாளரால் குறுக்கு விசாரணை**

1) தாவாச் சொத்தில் நான் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருப்பது தொடர்பாக நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் எத்தகைய சட்ட விரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

2) என்னுடைய பாகத்தை மறைத்து விற்பனை செய்ய முற்பட்டதாகவும், கம்பி வேலி அமைத்ததை நான் தடுத்ததாகவும், வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குமூலம் எதுவும் இல்லை என்றாலும், அவர்களது உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. எனவே 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக செலவு தொகையுடன் தள்ளுபடி

செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வாய்மொழியாக புகார் அளித்ததாக சொல்வது தவறானது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.02.14 16:31:21 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.